# தேடும் அன்பு தெய்வம் - என்னைத்

தேடும் அன்பு தெய்வம் – என்னைத்  தேடி வந்த நேரம்
கோடி நன்மை கூடும் – புவி  வாடும் நிலைகள் மாறும      - ( 2 )
இந்த வானதேவன் தந்த வாழ்வுப்பாதை
எந்தன் வாழும் காலம் போகும் - ( 2 )

**1**
வார்த்தையாகி நின்ற இறைவன் - இந்த
வாழ்வைத் தேர்ந்த தலைவன்        - 2
பாரில் எங்கும் புதுப் பார்வை தந்து - அந்தப்
பாதையில் அழைத்த அறிஞன்        - 2
காலம் கடந்த கலைஞன் -என் தலைவன்
இந்த வானதேவன் தந்த வாழ்வுப்பாதை
எந்தன் வாழும் காலம் போகும்     - ( 2 )

(இந்த வானதேவன்...)

**2**
உறவுப் பாலம் இன்று வளர - இங்கு
இறைவன் அரசு மலர -2
உதயமாகி வந்து இதயம் யாவும் - தந்து
உலகம் வாழ வைத்த இறைவன் -2
ஞானம் காத்த கலைஞன் - என் தலைவன்
இந்த வானதேவன் தந்த வாழ்வுப்பாதை
எந்தன் வாழும் காலம் போகும் - ( 2 )

(இந்த வானதேவன்...)

**3**
அடிமை அமைப்பு இங்கு ஒழிய - எங்கும்
மனித மாண்பு நிறைய -2
புரட்சிக் குரல் கொடுத்து புதிய வழி வகுத்து
புதுமை செய்த பெரும் புனிதன் -2
என் வாழ்வைக் கடந்த இறைவன் -என் தலைவன்

(இந்த வானதேவன்...)